செ.வெ.எண் 06 நாள் : 03.06.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்து துவக்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் இன்று (03.06.2021) மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து துவக்கி வைத்தார்.

**நிகழ்ச்சியின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்களின் 98வது பிறந்த நாளை முன்னிட்டும், அவர் தமிழகத்திற்கும் தமிழ் சமுதாயத்தின் மேன்மைக்கும் ஆற்றிய சாதனைகளை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்துகொள்ளவும், அவர்களின் பிறந்த நாளை இயற்கை எழிலோடு அனுசரித்து கொண்டாடும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் தலா 1000 மரக்கன்றுகள் வீதம் 38,000 மரக்கன்றுகள் நடுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய காலி இடங்கள், முக்கியச் சாலையோரங்கள் மற்றும் பொது இடங்களில் தேக்கு, வேம்பு, நெல்லி, புங்கன், நாவல், மாதுளை, ஆலமரம் போன்ற மர வகைகள் நடப்பட உள்ளன.

சுற்றுப்புற சூழ்நிலைகளை தூய்மையாக பாதுகாத்திடவும், மனிதன் உயிர் வாழ தேவையான பிராண வாயுவினை அதிகப்படுத்திடவும் காடுகள் முக்கிய பங்காற்றி வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் 16,700 ஹெக்டேர் பரப்பளவில் வனக்காடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனை பாதுகாத்திடவும், காடுகளின் பசுமை போர்வையினை அதிகரித்திடவும், மாவட்ட வனத்துறை மூலம் அடர்காடுகள் வளர்த்து, காலி இடங்கள் மற்றும் சாலையோரங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து பசுமைவெளியை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு நடவு செய்யப்படும் மரங்கன்றுகள் சேதம் அடையாமல் தடுப்பதற்காக தடுப்பு வேலிகளை அமைத்து தேவையான நீரினை ஊற்றி, முறையாக பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மரம் வளர்த்தல் மற்றும் காடுகளை பராமரிப்பதன் அவசியம் குறித்து, இந்த சிறந்த பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு. குகனேஷ், வனச்சரக அலுவலர்கள் திரு. சசிகுமார், திரு. ராஜசேகர், திரு. மாதேஸ்வரன், திரு.தர்மராஜ் மற்றும் வனப்பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**